சங்கடங்கள் இருக்கின்றன என்றூர்கள். ஸ்டாம்ப் ஒட்டாமல் பணம் வசூலிப்பதற்கான ஏற்பாடுகள் இடைக்காலத்தில் செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. எம். பூபதி : பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தை களுக்குப் புத்தகங்கள் கொடுக்க வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பேப்பர்கள் வந்தன. எந்த அளவுக்கு அவை ஏழைக் குழந்தைகளுக்குப் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கல்வித் துறை மானியத்தில் கேட்கலாம்.

Increase of price on hosieries.

* 337 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the South India Hosiery Manufacturers' Association has increased the prices of all its commodities from about 24th June 1969?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென்னிந்திய ஹோசியரி உற்பத்தியாளர் சங்கத்தைச் சார்ந்த சில உறுப்பினர்களே கீழ்க் கண்டவாறு பனியன் விலையை மட்டும் உயர்த்தியுள்ளனர்.

ரகம்	பழைய விலை		இப்போதைய விலை	
	ரூ.		ரூ.	
பனியன் (உயர்ந்த ரகம்)	23–00	டஜன்	23–50	டஜன்
பனியன் (பின்னிய ரகம்)	21–00	டஜன்	21–75	டஜன்
பனியன் (சாதாரண ரகம்)	15–75	டஜன்	16–25	டஜன்

திரு. என். எஸ். வி. சித்தன் : இதுபோன்று பனியன்கள் மேஜோடுகள் விலை உயர்வால் பெரும்பாலும் நடுத்தர மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஒரு சில ரக பனியன்களின் விலை மட்டும் உயர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த விலை உயர்வை நியாயம் என்று அரசாங்கம் கருதுகிறதா ? இதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூலப் பொருள் விலையேற்றம், இடைக்காலத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுத்த ஊதிய உயர்வு இவைகளின் அடிப்படையில் விலையேற்றியதாக விளக்கம் கொடுத் திருக்கிறூர்கள். பொது மக்களைப் பாதிக்கும் அளவுக்கு இருக்கு மானல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கும். தற்போது ஒரு டஜனுக்கு 50 காசு, 75 காசு என்ற அளவுக்குத்தான் உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பனியன் உற்பத்தியாளர் விலையை உயர்த்தி யதற்கான காரணம் நூல் விலை அதிகரித்ததுதான் என்பதை அரசு உணருமா ? நூல் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூல் விலையேற்றம் ஒரு காரணம் என்று அவர்கள் தரப்பிலும் சொல்லப்பட்டது. நேற்று முன்தினம் நூல் விலையேற்றத்தைத் தடுக்கவும், குறைந்த விலையில் நூலை விநியோகம் செய்யவும் ஆலை அதிபர்களைக் கூட்டி மாநில அரசு ஒரு மாநாடு நடத்தியது. அதிலே சில யோசனைகள் கூறப்பட்டன. அந்த யோசனைகளின் அடிப்படையில் நூல் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : ஜவுளிக் கடைகளில் பனியன் போன்ற பொருள்களின்மீது ரிடைல் பிரைஸ், ஹோல்சேல் பிரைஸ் இரண்டையும் துணிகளின் மேல் எழுதி வைத்திருக்கிறார்களா என்று பார்க்கும்போது சில கடைகளில் அந்த விலைகளைக் குறிக்காது அதிக விலைக்கு விற்பதாக நீதிமன்றத்தில் கூட வழக்குகள் வந்திருக்கின்றன. எல்லாக் கடைகளிலும் பனியன் போன்றவற்றை விற்கும்போது அதன் ரிடைல் பிரைஸை அந்தத் துணிகளில் அச்சடித்து விற்கப்பட வேண்டுமென்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்று கண்ட்ரோல் பிரைஸ் மீதெல்லாம் மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க டெக்ஸ்டைல் கமிஷனர் என்ற அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் மூலம் இவை கண்காணிக்கப்படுகிறது.

அரசுப் போக்குவரத்து

*338 வினா.—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கத்துறையில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன ?

(இ) அதன்மூலம் கிடைக்கும் மாத வருமானம் என்ன ?

(உ) இந்த வருமானம் மூலதனத்திற்கு என்ன விகிதாச்சாரத்தில் வருகின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 31—12—1969 தேதி நிலவரப்படி துறையிலிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,968.

(இ) 1969-ம் ஆண்டு டிசம்பர் மாத வருமானம் ரூ. 120.26 லட்சம்.

(உ) 7.3 சதவிகிதம்.

திரு. ஏம். இராஜா : 1,968 பேருந்துகள் ஓடியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தின் மூலதன விகிதாசாரம் 7.3 சதவிகிதம் என்று கூறினார்கள். இந்த வருமானம் நிகர வருமானமா அல்லது மொத்த வருமானமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மொத்த வருமானம்.